ஒன்றிய பா.ஜ.க. அரசின் சென்சஸ் – தொகுதி மறுவரையறை வஞ்சகம் நிறைந்தது!

அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுயநலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும்;

தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணி வகுக்கும்! தமிழ்நாடு வெல்லும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் சூளுரை!

சென்னை, ஜூன் 8– ஒன்றிய பா.ஜ.க. அரசின் சென்சஸ் – தொகுதி மறுவரையறை வஞ்சகம் நிறைந்தது என்றும், அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுயநலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும் தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணி வகுக்கும்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் சூளுரைத்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

- மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் நிகழும் தாமதமும், அதைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் தொகுதி மறுவரையறையும் தற்செயலானவை அல்ல. நான் தொடக்கம் முதலே எச்சரித்து வரும் ஆபத்து நம் வாசற்படி வரை வந்தேவிட்டது.
- ஒன்றிய பா.ஜ.க. அரசு சென்சஸ் மற்றும் தொகுதி மறுவரையறையைச் செயல்படுத்தவுள்ள போக்கு வஞ்சகம் நிறைந்தது. மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி வளர்ச்சியடைந்த தென்மாநிலங்கள் தண்டிக்கப்பட இருக்கின்றன.
- அதேவேளையில், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டைப் பல பத்தாண்டுகளாகக் காற்றில்

பறக்கவிட்ட மாநிலங்களோ நாடாளுமன்றத்தில் கூடுதல் இடங்களைப் பெற இருக்கின்றன. அநீதியான இந்த நடவடிக்கை கூட்டாட்சியின் சமநிலையைக் குலைத்து, பொறுப்பற்ற தன்மைக்கு வெகுமதி அளிக்கிறது.

ப.சிதம்பரம் விளக்கமாக கூறியுள்ளார்!

- இந்தச் சதித் திட்டம் குறித்து நான் முன்பே எச்சரித்திருந்தேன். தற்போது, ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களும், பா.ஜ.க. எப்படி இந்தக் கைவரிசையைக் காட்டப் போகிறது என்பதை விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். நாம் விழிப்போடு இருப்பது மட்டுமல்ல, தென்னகத்தின் குரலைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வியூகங்களையும் தீட்டவேண்டிய தருணம் இது.
- 1971ஆம் ஆண்டு சென்சஸ் தரவுகள் போய், 2027 மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தரவுகள் தான், அதற்கடுத்து உடனே நிகழும் தொகுதி மறுவரையறைக்கு, அடிப்படையாக அமையும். தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, தனக்குச் சாதகமான முறையில் நாடாளுமன்ற இடங்களை பா.ஜ.க. நிர்ணயித்துக் கொள்ளத்தான் இது வழி ஏற்படுத்தும்.
- தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படும் மாநிலங்களின் கவலைகள் கருத்தில் கொள்ளப்படும் என ஒன்றிய உள்துறை அமைச்சகம் சொல்கிறது. ஆனால் இவை தெளிவற்ற மழுப்பல் பதில்கள். இவர்கள் சொல்வதைத் தண்ணீரில்தான் எழுதிவைக்க வேண்டும். நாம் கேட்பதெல்லாம் நாடாளுமன்றத்தில் உறுதி அளியுங்கள், உரிய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுங்கள் என்பதே!

ஜம்மு – காஷ்மீரில் பா.ஜ.க. வாக்குறுதி என்ன ஆச்சு!

- பிரிவு 370ஐ நீக்கிய பிறகு என்ன நடந்தது என்று பார்த்தாலே இவர்களது பேச்சின் இலட்சணம் புரிந்துவிடும். ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்கப்படும் என ஒன்றிய அரசு சொன்னது. தேர்தலும் நடைபெற்றது. உச்ச நீதிமன்றத்திலேயே உறுதியளிக்கப்பட்டது. ஆனாலும், ஜம்மு காஷ்மீர் இன்னும் யூனியன் பிரதேசமாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட சத்தியவான்களோடு தான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.
- 2027 சென்சஸ் அடிப்படையில் தொகுதி மறுவரையறையை ஒன்றிய அரசு மேற்கொண்டால், தென்னகத்தின் ஜனநாயக வலிமை மதிப்பில்லாத அளவுக்குக் குறைந்துவிடும்.
- அ.தி.மு.க. போன்ற அடிமைத் துரோகிகள் தங்களின் சுய நலத்துக்காக பா.ஜ.க. முன் மண்டியிட்டாலும், தி.மு.க.வின் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு அணிவகுக்கும்! நம் மாநிலம் வளர்ச்சியடைந்துள்ள ஒரே காரணத்துக்காகத் தண்டிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில்

ரூ.16.02 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள்!

அமைச்சர்கள் சு.முத்துசாமி – மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தனர்!

ஈரோடு, ஜூன் 8 -

ஈரோடு அரசு மாவட்ட தலைமை பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் பெருந்துறை அரசு மருத்துவ கல்லூரியில் நேற்று முன்தினம் (6.6.2025) வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.7.87 கோடி மதிப்பீட்டில் 11 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், ரூ.8.15 கோடி மதிப்பீட்டில் 15 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்தம், மருத்துவ பட்டப்படிப்பு முடித்த 98 மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களையும் வழங்கினார்கள்.

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தெரிவித்தாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டப் பணிகளை பொதுமக்களுக்காக அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மக்களை தேடி மருத்துவம் திட்டம் அறிவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் கீழ், 2 கோடியாவது பயனாளி நஞ்சனாபுரத்தைச் சேர்ந்த திருமதி சுந்தரம்பாள் என்பவருக்கும் மற்றும் 2 கோடியே 1 வது பயனாளி திருமதி வசந்தா என்பவருக்கும் மருந்து பெட்டக தொகுப்பு வழங்கினார்கள். மேலும், "இன்னுயிர் காப்போம்", நம்மை காப்போம் 48, கலைஞரின் வருமுன் காப்போம், சிறுநீரக காப்போம் போன்ற திட்டங்கள் மக்களின் நலனுக்காக அறிவிக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்தி 8 தளங்கள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனைக் கட்டடம் ரூ. 67.02 கோடி மதிப்பீட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் 1 தலைமை மருத்துவமனை, 76 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 375 துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இதில் கடந்த 4 ஆண்டுகளில் 28 துணை சுகாதார நிலையங்கள் புதியதாக அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாநகராட்சியில் 17 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்பட்டு, தற்போது 3 துணை சுகாதார நிலையங்கள் திறந்து வைக்கப்பட உள்ளது.

மேலும், பெருந்துறை அரசு மருத்துவ கல்லூரியில் பயின்ற மாணவ, மாணவியர்கள் புகழ் பெற்ற மருத்துவர்களாக வெளிநாடுகளிலும், நம் நாட்டிலும் சிறப்பாக பணிபுரிந்து வருகின்றார்கள். 22.11.2023 அன்று புற்றுநோய் கண்டறியும் சேவை காளிங்கராயன் பாளையம் துணை சுகாதார நிலையத்தில் துவங்கி வைக்கப்பட்டு, வாய் புற்றுநோய் 5,24,410 நபர்களுக்கும், மார்பக புற்றுநோய் 1,86,187 நபர்களுக்கும், கர்ப்பபை புற்றுநோய் 1,33,451 நபர்களுக்கும் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன என தெரிவித்தார்கள்.

இன்றைய தினம், வீட்டு வசதி, மதுவிலக்கு, ஆயத்தீர் வைத்துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் ஈரோடு அரசு மாவட்ட தலைமை பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் அறுவை அரங்குகள், ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊட்டச்சத்து மறுவாழ்வு மையம் என மொத்தம் ரூ.4.52 கோடி மதிப்பீட்டில் 2 புதிய மருத்துவ கட்டிடங்களையும், பெருந்துறை அரசு மருத்துவ கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 15 வது நிதிக்குழு (சுகாதார மானியம்) 2023 2024 திட்டத்தின் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் கருங்கல் பாளையம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் சூரியம்பாளையம் நகர்புற துறை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் வீரப்பன்சத்திரம், இராஜாஜிபுரத்தில் நகர்புற துறை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் நேதாஜி சாலை, எம்.ஜி.பாளையத்தில் நகர்புற துறை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கருமாண்டி செல்லிபாளையம், கந்தம்பாளையத்தில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கும்டாபுரத்தில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பர்கூரில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சித்தோடு வட்டார பொது சுகாதார அலகு, ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆவுடையார்பாறையில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம் என மொத்தம் ரூ.7.87 கோடி மதிப்பீட்டில் 11 மருத்துவ கட்டிடங்கள் திறந்து வைத்தார்கள்.

தொடர்ந்து, 15வது நிதிக் குழு (சுகாதார மானியம்) 2025 2026 திட்டத்தின் கீழ், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் அளுக்குளி துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் கொளத்துப்பாளையம் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் குப்பாண்டாம்பாளையம் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் நாதாகவுண்டன்பாளையத்தில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் ரெட்டிபாளையத்தில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் தண்ணீர்பந்தலில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் தொட்டம்பாளையத்தில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் கடம்பூர் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் ராஜன்நகரில் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் அரச்சலூரில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் நசியனூரில் துணை சுகாதார நிலைய புதிய கட்டிடம், ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலை வட்டார ஆரம்ப சுகாதார நிலைய அலகு புதிய கட்டிடம், ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் மொடக்குறிச்சி வட்டார ஆரம்ப சுகாதார நிலைய அலகு புதிய கட்டிடம், ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவகிரி வட்டார ஆரம்ப சுகாதார நிலைய அலகு புதிய கட்டிடம், ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் தூக்க நாயக்கன்பாளையம் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய பொது சுகதார அலகு புதிய கட்டிடம் என மொத்தம் ரூ.8.15 கோடி மதிப்பீட்டில் 15 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

அதனைத்தொடர்ந்து, பெருந்துறை அரசு மருத்துவ கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் மருத்துவ பட்டப்படிப்பு முடித்த 98 மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார்கள். முன்னதாக கோவை அரசு போக்குவரத்துக் கழகம் சார்பாக வழங்கப்பட்ட 2 பேருந்துகள் சேவையினை துவக்கி வைத்தார்கள். இப்பேருந்துகளானது கிராமத்தை நோக்கி மருத்துவ மாணவ, மாணவியர்கள் மற்றும் நோயாளிகள் ஆகியோர் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் செயல்பட உள்ளது.

தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் அனைத்துத்துறைகளின் மூலம் கடந்த நான்கான்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் சாதனைகளை தொகுத்து, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்ட புத்தகத்தை வெளியிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர். ப.செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. சுப்பராயன் (திருப்பூர்), கே.இ.பிரகாஷ் (ஈரோடு), சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), ஏ.ஜி.வெங்கடாசலம் (அந்தியூர்), ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி சு. நாகரத்தினம் சுப்பிர மணியம், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு. சாந்தகுமாரி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, முதல்வர் (பெருந்துறை, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை) மரு.ரவிக்குமார், உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எடப்பாடி பழனிச்சாமி தன்னையே விற்று விட்டார்!

தமிழ்நாட்டு மக்கள் பழனிச்சாமியின் துரோகத்தை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்!

கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கடும் கண்டனம்!

சென்னை, ஜூன்.7-

"நீங்கள் உங்களையே விற்றுவிட்டீர்கள் நாங்கள் அப்படி அல்ல! என்று கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தமது வலைதளத்தில் எடப்பாடி பழனிச்சாமிக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி.யின் வலைதளப் பதிவு வருமாறு :

தமிழக மக்கள் உங்கள் துரோகத்தை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

தங்கள் சொந்த மாநில நலன்களை கைவிட்டு, தனிப்பட்ட அரசியல் பிழைப்புக்காக டெல்லி எஜமானர்களுக்கு பணிந்து நடப்பவர்கள் எங்களுக்குப் போதித்திட எந்த உரிமையும் இல்லை.

தமிழ்நாட்டின் எதிர்காலத்துடன் விளையாடுபவர்களை - நமது விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளின் நலன்களை அழிப்பவர்களை நீங்கள் பாதுகாக்கிறீர்கள்.

அச்சுறுத்தல் நம்முடைய வீட்டு வாசலில் நிற்கிறது. உங்கள் டெல்லி எஜமானர்களின் பொய்கள் தமிழ்நாட்டில் எடுபடாது என்று அவர்களிடம் சொல்லுங்கள். எழுதப்பட்ட, தெளிவாக வரையறுக்கப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தின் தீர்வைத் தவிர வேறு எதையும் நாங்கள் விரும்பவில்லை.

அரசியலமைப்புச் சட்ட உத்தரவாதங்கள் கிடைக்கும் வரை நாங்கள் அமைதியாக இருக்க மாட்டோம். உரத்த குரல் எழுப்புவோம்.

நீங்கள் உங்களையே விற்றுவிட்டீர்கள். நாங்கள் அப்படி அல்ல!

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப்பதிவில்குறிப்பிட்டுள்ளார்.

திருச்சியில் ரூ.290 கோடியில் உலகத்தரத்துடன் கூடிய மாபெரும் நூலகத்திற்கு

பெருந்தலைவர் காமராஜர் பெயர் சூட்டிய முதல்வருக்குப் பாராட்டுகள் - நன்றி!

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிக்கை!

சென்னை, ஜூன்.7-

இது குறித்து கு.செல்வபெருந்தகை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி, இலவச கல்வி வழங்கிய பெருந்தலைவர் காமராஜரின் பெயரில் திருச்சியில் ரூபாய் 290 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்துடன் அமைக்கப்படவுள்ள மாபெரும் நூலகத்திற்கு காமராஜர் பெயர் சூட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை பாராட்டுகிறேன். தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மூவாயிரம் கோயில்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் குடமுழுக்கு செய்து சாதனை படைத்து ஆன்மீகப் புரட்சி செய்திருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், அதனை செயல்படுத்திய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களையும் மனதார பாராட்டுகிறேன்.

தமிழகத்தில் மதநல்லிணக்கத்தை போற்றுகிற வகையில், மதச்சார்பற்ற அரசாக செயல்படுவதை இந்நிகழ்வு மேலும் உறுதிபடுத்துகிறது. இதன்மூலம் விஷம பிரச்சாரம் செய்து வருகிற ஆர்.எஸ்.எஸ்., சங்பரிவாரங்களுக்கு மிகப் பெரிய அளவில் பதிலடி கொடுக்கின்ற வகையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

அதேபோல, ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத் திற்கு உரிய நிதியை ஒதுக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணித்ததற்காக ஏற்கனவே வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தோம். இன்று தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்திற்கு ஒருநாள் ஊதியமான 319 ரூபாயை 336 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், இதனால் 88 லட்சத்து 16 ஆயிரத்து 448 பேர் பயனடைகின்றனர். கடந்த ஆண்டு 100 நாள் வேலை திட்டத்திற்கு ரூபாய் 2900 கோடி ஒதுக்கப்பட்டது. அதில் சம்பளத் தொகை போக, பொருட்கள் வாங்கியதற்காக வழங்க வேண்டிய ரூபாய் 1400 கோடியை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிலுவையில் வைத்துள்ளது. இதனை உடனடியாக விடுவிக்க வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

புதுச்சேரி–காரைக்கால் மாநிலக் கழக அவைத் தலைவர்

க.மணிவண்ணன் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 8–

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

புதுச்சேரி - காரைக்கால் மாநிலம். திருப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும் - மாநிலக் கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும் - மாநிலக் கழக அவை தலைவருமான க.மணிவண்ணன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் - புதுச்சேரி - காரைக்கால் மாநிலக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உடல்நலக் குறைவால் இயற்கை எய்திய சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் நேற்று முன்தினம் (6.6.2025) அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.